**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064806

1. District : மாவட்டம் Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 15/2019 | Date: நாள் 18.12.2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 | Sections பிரிவுகள்: 7 (a)

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 17.12.2019 18.00 hrs | Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.12.2019 | Time : நேரம் 10.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Surveyor office, Tirunelveli 8 Km North West

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் J.PAULRAJ JOSEPH | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.JEBAMANI NADAR

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 09.05.1959 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் RETIRED PROFESSOR | (g) Address : முகவரி 1/27 Second Middle Street, Gandhinagar Tirunelveli 627008

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Al Ameen, Sub Inspector of Survey, Tirunelveli.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 18.12.2019-ம் தேதி காலை 10.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.J.பால்ராஜ் ஜோசப் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட திருநெல்வேலி சப் இன்ஸ்பெக்டர் ஆப் சர்வேயர் திரு.அல் அமீன் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 18.12.2019-ம் தேதி 11.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2019 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் ஜெ.பால்ராஜ் ஜோசப், 60/19 த/பெ. S.ஜெபமணி நாடார், 1/27, இரண்டாவது நடுத்தெரு, காந்திநகர், திருநெல்வேலி-627008. பெறுனர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, திருநெல்வேலி. அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் கணித பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண் 50

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு Paulraj Joseph 18/12/19

J. Anitha 18/12/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18. 12.19 — 11.45.

Name: பெயர் ஜெ. அனிதா,
Rank: நிலை ...................... No. எண் .........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க.பி.
திருநெல்வேலி.

அயன் புஞ்சை சர்வே எண் 603/3 பாகம், 603/5ல் 22.75 செண்ட் இடம் மற்றும் அதில் உள்ள வீட்டையும் திருமதி.ரத்னாவதி மற்றும் 5 நபர்களிடம் இருந்து 2000ம் வருடத்தில் திருநெல்வேலி இணை-I சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 547/2000ன்படி கிரையம் பெற்றேன். மேற்படி கிரையம் பெற்ற இடத்தை தற்போது என் பெயரில் தனிப்பட்டா பெறவேண்டி திருநெல்வேலி தாலுகா அலுவலகத்தில் உள்ள e-சேவை மையத்திற்கு ஆன்லைனில் மனு பதிவேற்றம் செய்ய சென்றபோது அங்கிருந்தவர்கள் சர்வேயரிடம் பட்டா மாறுதல் படிவத்தை காண்பித்து கையெழுத்து வாங்கி வரச்சொன்னார்கள். நான் அதன்படி திருநெல்வேலி சப் இன்ஸ்பெக்டர் ஆப் சர்வேயர் திரு.அல் அமின் அவர்களை 21.11.2019ல் சந்தித்து என்னுடைய பட்டா மாறுதலுக்கான படிவத்தை காண்பித்தபோது அவர் என்னிடம் படிவத்துடன் பத்திர நகல், EC, வீட்டு தீர்வை நகல்களை வாங்கிக்கொண்டு அந்த படிவத்தில் அவருடைய கையெழுத்திட்டு இடத்தை பார்த்த பின்பு ஆன் லைனில் ஏற்றிக்கொள்ளலாம் என்று சொல்லி ஆவணங்களை அவரே வைத்துக்கொண்டு என்னை அனுப்பி வைத்தார். அதன்பின்பு பலமுறை சென்று சர்வேயர் திரு.அல் அமீன் அவர்களை பார்த்தபோது அவர் ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி என்னை திருப்பி அனுப்பினார். கடந்த 04.12.2019ம் தேதி மாலையில் சர்வேயர் அலுவலகத்திற்கு சென்று சர்வேயர் அல் அமீன் அவர்களை பார்த்தபோது அவர் அருகில் இருந்த சாமி என்பவரிடம் நாளை இவருடைய இடத்தை அளக்க செல்வோம் ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு என்னிடம் நாளை (05.12.2019) இடத்தை அளக்க வருகிறோம் என்று சொன்னார். அதன்படி 05.12.2019ம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் என்னுடைய இடத்தை சாமி மற்றும் இரண்டு நபர்கள் வந்து அளந்து விட்டு சாமி அவரது செல்போனில் அங்கிருந்து சர்வேயர் திரு.அல் அமீன் அவர்களிடம் தொடர்பு கொண்டு இடம் பத்திரம் படி சரியாக உள்ளது என்று சொல்லிவிட்டு என்னிடம் செல்போனை தந்து பேசச்சொன்னார். நான் சர்வேயரிடம் பேசியபோது அவர் இடம் சரியாக உள்ளது ஆபீஸ் செலவை பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு ஆபீசில் வந்து பார்க்க சொன்னார். அதன்பின்பு நானும் இரண்டு மூன்று தடவை பார்க்க சென்றபோது அவரை பார்க்க முடியவில்லை. கடந்த 16.12.2019ம் தேதி மதியம் சுமார் 02.30 மணியளவில் சர்வேயர் அலுவலகத்திற்கு சென்றபோது அங்கு சாமிதான் இருந்தார். அவரிடம் சர்வேயரை பற்றி கேட்டபோது அவர் வெளியே சென்றிருக்கிறார் என்று சொல்லி, நான் 21.11.2019ம் தேதி கொடுத்த பட்டா மாறதலுக்கான படிவத்தை என்னிடம் கொடுத்து ஆன் லைனில் ஏற்றி விட்டு சர்வேயரை பார்க்கும்படி சொன்னார். அன்று என்னிடம் ஒரிஜினல் ஆவணங்கள் இல்லாததால் நான் வீட்டிற்கு சென்றுவிட்டு மறுநாள் 17.12.2019 மதியம் சுமார் 01.15 மணியளவில் இ-சேவை மையத்தில் ஆவணங்களை கொடுத்து ஆன்லைனில் ஏற்றிவிட்டு மாலை சுமார் 17.30 மணியளவில் திரு.அல் அமீன் அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்த

போது அவர் சிறிது நேரம் காத்திருக்க சொன்னார். பின்பு சுமார் அரை மணி நேரம் கழித்து அவரிடம் தனிப்பட்டா மாறுதல் தொடர்பாக கேட்டபோது அவர் உங்களுக்கு இடத்தை எல்லாம் அளந்து ரிப்போர்ட் தயாராகிவிட்டது. எனக்கு நீங்கள் ரூ.15,000/- தந்தால்தான் அறிக்கை அனுப்புவேன் என்று சொன்னார். நான் அவ்வளவு பணம் என்னால் தரமுடியாது, தற்போது நான் ரிட்டயர்டு ஆகிவிட்டேன் என்று சொன்னேன். அதற்கு அவர் ரூபாய் 12,000/- ஆவது தந்தால்தான் அறிக்கையை அனுப்புவேன் என்று கண்டிப்புடன் கூறிவிட்டார். நானும் வேறு வழியில்லாமல் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து யோசித்துப் பார்த்ததில் எனக்கு லஞ்சமாக அவருக்கு பணம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே அரசு வேலையை செய்ய லஞ்சமாக ரூபாய் 12,000/- கேட்கும் திருநெல்வேலி சப் இன்ஸ்பெக்டர் ஆப் சர்வேயர் திரு.அல் அமீன் மீது நடவடிக்கை எடுக்க 18.12.2019-ம் தேதி காலை 10.30 மணிக்கு திருநெல்வேலி லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். இப்படிக்கு sd.18.12.19

Sir, Received the complaint on 18.12.2019 at 10.30 hrs and conducted confidential enquiry. I registered a case in Tirunelveli V&AC Cr.No.15/2019 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 18.12.2019 at 11.00 hrs. sd.J.Anitha, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

J. Anitha
18.12.19.

**INSPECTOR OF POLICE**
**Vigilance and Anti-Corruption**
**Tirunelveli Detachment**
**TIRUNELVELI**